REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆவணி 15உ சனி (31—8—57) ★ ★ வெளியீடு: ஆவணி 16உ ஞாயிறு (1—9—57) [இதழ் 67

கலைவாணர்

அனுதாப இதழ்

'தமிழகத்தின் கண்ணீர், ஊற்று நிலையாகிறது'

★

இன்றைக்குப் பதினோரு ஆண்டுகளுக்குமுன் —சட்டத்தின் 'இரும்புக் கரங்கள்' கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களை மறைத்திருந்த நேரத்தில்—21—7—46 'திராவிட நாடு' இதழில், அண்ணா அவர்கள் நகைச்சுவை மன்னரின் உளப்பாங்கை, நாட்டு மக்களுக்குப் படம் பிடித்துக் காட்டினார்; அது, இது:—

'அவரைப்போல் நம்மைச் சிரிக்க வைத்தவர்களுமில்லை; அவரைப்போன்று நம்மை அழவைத்தவர்களுமில்லை'

'நகை குலுங்க நாளெல்லாம் விழாவாகக் கொண்டாடி வந்தவர்'

கலைவாணரின் உளப்பாங்கு; அண்ணா படப்பிடிப்பு

'எல்லாரும் ஒருதடவை
கை தட்டுங்கோ!'
'தட்டமாட்டீங்களா! பரவாயில்லை!'

வெறும் நகைச்சுவைப் பேச்சல்ல; அல்லது திரைப்படத்துக்காக மட்டுமே தீட்டப்பட்ட வாசகமல்ல!

இது, நகைச்சுவை மன்னன் தோழர் என். எஸ் கிருஷ்ணனின் உள்ளத்தின் படப்பிடிப்பு! அவர் வாழ்க்கையிலே கொண்டுள்ள வழிகாட்டி! நண்பர்கள் புடைசூழ, நகை குலுங்க, நாளெல்லாம் விழாவாகக் கொண்டாடி வாழ்ந்தவர். இன்று? விவரிக்க நமக்கு வேதனையாக இருக்கும். அவரோ, 'பரவாயில்லை' என்ற பாணியிலேதான் இருப்பார்; ஏனெனில், அது வெறும் வாசகமல்ல—அவருடைய உள்ளம்!

நகைச்சுவை என்ற துறையைப் பலர் பலவிதத்திலே பல காரியத்துக்குப் பயன்படுத்திப் பல்வேறு வகையான பலனைப் பெற்றனர்; இதுவரை ஒருவராவது, நகைச்சுவையை, நாட்டு மக்களுக்கு நற்கருத்துக்களைப் புகுத்தும் கருவியாக்கியதில்லை; அதன்பலனாக, நடிகர் உலகில் நடுநாயக மணியாக மட்டுமல்ல—நாட்டுச் சிந்தனைச் சிற்பிகளின் முன்வரிசையிலே முக்கியமான இடமும் பெற்றதில்லை; அவரைப்போல, நம்மைச் சிரிக்க வைத்தவர்களுமில்லை; அவர்போல் வேறு யாரும் நம்மை இதுவரை அழ வைத்தவர்களுமில்லை. அன்று தமிழகம் விட்ட கண்ணீர், ஊற்று நிலையை அடைந்துவிட்டது.

தமிழகம், நடிகர்களைப் பாராட்டி இருக்கிறது; பழக்கமான மொழியில் கூறுவதென்றால், சொர்ணாபிஷேகம் செய்திருக்கிறது; ஆனால், நடிகருக்கு இடுக்கண் வந்தபோது கண்ணீர் சொரிந்தது இல்லை. கிருஷ்ணன்—பாகவதர் சம்பவத்தின் போதுதான், ஒரு பெருங் கூட்டம், கட்சி முதலிய கட்டுகளையும் தாண்டிக் கண்ணீர்விட்டது!

என். எஸ். கே. வெறும் நடிகர் மட்டுமல்ல; அவர் ஒரு சின்னமாக விளங்கினார்.

'நகைச்சுவைத் துறை என்பது நாட்டு மக்களைச் சிரிப்பு மூட்டும் வெறும் வெட்டி வேலை' என்ற நிலையைவிட்டுக் கடந்து, நற்கருத்துக்களை மிக 'இலாகவமாகப்' புகுத்தும் நிலை பிறந்துவிட்டது என்பதை விளக்கும் சின்னமாக என். எஸ். கே. விளங்கினார். சீர்திருத்தக் கருத்து எனும் சூரணத்தைத் தேனில் குழைத்துத் தந்தார், நாட்டு மக்களுக்கு! அதனைத் தந்ததுகூட, தாய் அன்புடன் தன் குழந்தைகளுக்கு மருந்தூட்டுவது போன்ற பக்குவமான முறையிலே!

கோணல் சேட்டைகள் செய்து மக்களைக் குலுங்கக் குலுங்க நகைக்கச் செய்தனர்; கண்ணுக்கு மேலே சுண்ணம் பூசியும், வாய் சுற்றிச் சிகப்புச் சாயம் பூசிக்கொண்டும், வளைந்து நடந்தும், திக்கிப் பேசியும், தடுக்கிவிழுந்தும், தலைகீழாக நடந்தும், மக்களைப் பல நடிகர்கள், வயிறு வெடிக்கும்படிச் சிரிக்கச் செய்திருக்கின்றனர். வயிறு வெடிக்கும்படித்தான் அவர்களால் செய்ய முடிந்ததேயொழிய, புதிய கருத்து புகுத்த முடியவில்லை.

'வயிறுவலி தாங்கமுடியவில்லையப்பா'

'ஏன்?'

'நேற்றிரவு நாடகத்திலே, பபூன் பக்கிரி செய்த காமிக் இருக்கிறதே, அடடா, ரொம்ப ஜோர்'

'என்ன செய்தான் பபூன்?'

"அடேயப்பா! எத்தனை சேஷ்டைகள் தெரியுமோ! அனுமார் வேஷக்காரன் வந்தான் ஸ்டேஜுக்கு; பபூன் பின்னோடு வந்து வாலை எடுத்துத் தன் மூக்கில் திணித்துக்கொண்டு தும்ம ஆரம்பித்தான்—தும்மினான், தும்மினான், பத்து நிமிஷம்; கொட்ட

(3-ம் பக்கம் பார்க்க.)

'வேதனை நிரம்பிய செய்தி கேட்டு திடுக்குற்றேன்—திகைப்புற்றேன் — துயருற்றேன்'

'ஆற்றொணாத் துயரம் நெஞ்சைத் துளைக்கிறது'

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் இரங்கற் செய்தி

பஞ்சத்தாலும் பட்டினியாலும், வறுமையாலும் வாட்டத்தாலும், நோயாலும் நொடியாலும் தாக்கப்பட்டு நிலைகுலைந்து கிடந்த தென்னக மக்களை—குறிப்பாகத் தமிழக மக்களை அவ்வப்போது சிரிக்க வைத்து அவர்களின் கவலையை அவ்விடம் போக்கிவந்த நகைச்சுவை மன்னர்—கலைவாணர்—கழக நண்பர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் இயற்கையெய்திய செய்திகேட்டுத் திடுக்குற்றேன்—திகைப்புற்றேன்—துயருற்றேன்.

கலையுலகில் ஓங்குபுகழ் எய்தி விங்கு ஒளிவீசிவந்த கலைவாணர் அவர்கள் மறைந்த துக்கச்செய்தி கேட்டு கோடிக்கணக்கான மக்கள், தமிழகத்திலும் பிற திராவிடப் பகுதியிலும், ஏன்—உலகமெங்கிலும் ஆற்றொணாத் துயரில் அழுந்தி ஈடுசெய்யும் வகைகாணாது வருந்துவர் என்பது திண்ணம்.

பொதுமேடை, இசையரங்கு, நாடக மன்றம், திரைப்படம் ஆகியவற்றின்மூலம் பகுத்தறிவு மணங்கமழும் சீர்திருத்தக் கருத்துக்களை, நகைச்சுவைபட எடுத்துக்கூறி, மக்களை சிரிக்கவைத்து சிரிக்கவைத்துச் சீர்திருத்தப் பணிகள் செய்துவந்த அந்தச் செம்மல் நம்மைவிட்டுப் பிரிந்தார் என்று எண்ணவே முடியவில்லை; அந்த எண்ணத்தைத் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு அது அவ்வளவு வேதனை நிரம்பியதாக இருக்கிறது.

சமுதாயத்தைச் சீரழித்துவந்த மூடநம்பிக்கை—குருட்டுப் பழக்கவழக்கம்—மூடபக்தி ஆகியவற்றை, உயர்ந்த—இனிய—எளிய கேலி கிண்டலின் மூலம் ஒதுக்கித்தள்ள அவர் முயற்சியெடுக்காத படமோ, நாடகமோ, கதா காலட்சேபமோ, பேச்சோ இல்லையென்றே சொல்லலாம். அவர் ஈடுபட்ட அத்தனை முயற்சியிலும் பகுத்தறிவுக் கருத்துக்களும் கழகக் கொள்கைகளும் மிளிரவே செய்தன.

கலைவாணர் என். எஸ். கே. அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தார்க்கு உற்ற நண்பராகவும், உறுதுணையாகவும் இருந்து வந்ததோடு, திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளிடத்தில் நீங்காப்பற்றும், தனியா ஆர்வமும் கொண்டு விளங்கிவந்தார். அரசியல் கட்சிப் பிரதிக்கட்சி வாதங்கள் ஏற்படும் பொழுதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம் நின்றுதான் வாதிடுவார். கழகத்தின் சார்பாக நடைபெறும் மாநாடு, பொதுக்கூட்டம், கலைநிகழ்ச்சி போன்ற எந்த நிகழ்ச்சிக்கு அழைத்தாலும் தடையேதும் சொல்லாமல் மகிழ்ச்சியோடு கலந்துகொண்டு வந்தார். அண்மையில் நடைபெற்றப் பொதுத்தேர்தலில் கழகத் தோழர்கள் வெற்றி பெறவேண்டுமென்பதற்காகப் பலதொகுதிகளுக்கும் சென்று கழகத்தோழர்களுக்காக அரும்பாடுபட்டார். கலைவாணர் அவர்கள் கடைசியாக கலந்துகொண்ட பொதுநிகழ்ச்சி, தாரமங்கலத்தில் அறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படத்தைத் திறந்துவைத்த நிகழ்ச்சியாகும். அப்படிப்பட்ட அரிய நண்பரை கழகம் இழந்துவிட்டதை எண்ணும்போது ஆற்றொணாத் துக்கம் நெஞ்சைத் துளைக்கிறது.

நகைச்சுவை மன்னர் அவர்கள், தம் வாழ்நாள்முழுவதும், ஈந்து—இசைபட வாழ்ந்து மறைந்தார். தமிழார்வம், கலைவளர்ச்சி, சமூக சீர்திருத்தம், நாட்டு விடுதலை, ஏழை—எளியவர்களை உயர்த்துதல், கல்வியைப் பரப்புதல் போன்ற அரும் பணிகளில் தம் வாழ்நாள் முழுதும் செலவிட்டுவந்தார். கலை அறிவிலும், கலை ஆற்றலிலும், விடாமுயற்சியிலும், எடுத்த செயலை முடிக்கும் திறமையிலும், எளியோர்க்கு வரையாது வழங்கும் தன்மையிலும் அவர் பிறர்க்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாகவே இருந்துவந்தார்—இனியும் புகழுடம்போடு இருந்துவருவார் என்பது உறுதி.

நான் 23—8—57-ஆம் நாளன்று சென்னை அரசாங்கப் பொது மருத்துவமனையில் அவரைச் சென்று கண்டபோது, அன்போடு அவர் கைகூப்பி வரவேற்றக் காட்சி இன்னமும் என் கண்ணைவிட்டு அகலவில்லை. தமக்கு சோர்வும் மயக்கமும் இருந்தாலும், 'விரைவில் நலம் பெற்றுவிடுவேன்' என்று நம்பிக்கைமொழி பகன்றார். அந்தோ! அந்த நம்பிக்கையெல்லாம் தவிடுபொடியாகும்படியாக மறைந்துவிட்டார்.

நாம் வாழ—நம் தமிழகம் வாழ—நம் திராவிடம் வாழ, அவரது வரலாறு—பெயர்—புகழ் ஆகியவை நமக்குப் பயன்படுமாக! அந்த ஆறுதலிலே நாம் அவருக்கு வீரவணக்கம் செலுத்துவோமாக !! வாழ்க என். எஸ். கே. புகழ் !!!

ரஷ்யாவுக்குச் சென்ற தென்னாட்டு கலைத்துறை முதல்வர்

தென்னாட்டிலிருந்து ரஷ்யாவுக்குச்சென்ற முதல் திரையுலகத் தம்பதிகள் கலைவாணர் என். எஸ். கே.—மதுரம் தம்பதிகளே ஆவர்.

கலைவாணரின் இறுதிப் பயணம்

சென்னை, ஆக. 31—

கலைவாணரின் உடல், இன்று காலை 8 மணிக்கு தியாகராய நகர் வெங்கட்ராம அய்யர் தெருவிலுள்ள கலைவாணர் அவர்களின் இல்லத்திலிருந்து ஊர்வலமாக மயிலாப்பூரிலுள்ள இடுகாட்டுக்கு எடுத்துச்செல்லப்பட்டது. அரசியல் தலைவர்கள் பலரும், கலைத்துறை பிரமுகர்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

ஊர்வலம், தியாகராய நகர் பாண்டிபஜார், பனகல் பார்க் கோபதி நாராயணசாமி செட்டி ரோடு வழியாக, சன் தியேட்டரை யடைந்து, அங்கிருந்து மவுண்ட்ரோடு வழியாக ரவுண்ட்டானாவைக் கடந்து, வாலாஜா ரோடு, பைக்ராப்ட்ஸ்ரோடு வழியாக திருவல்லிக்கேணி கடற்கரை சென்று அங்கிருந்து ஐ. ஜி. பீச் வழியாக, எட்வர்டு எலியட் ரோடு சென்று இடுகாட்டை யடைந்தது.

இடுகாட்டில் நடக்கும் அனுதாபக் கூட்டத்தில் பல பிரமுகர்களும் கலைவாணருக்குத் தங்கள் இறுதி மரியாதையைத் தெரிவித்துக்கொண்டு, இரங்கலுரை யாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 31—8—57 சனி

நமது கையறுநிலை

எங்கும் இருள்!

எங்கும் அழுகுரல்!

சிறார் அழுகின்றனர்! இளைஞர்கள் விம்மி விம்மி அழுகின்றனர்! முதியவர் தேம்பித் தேம்பி அழுகின்றனர்! பேதையர் அழுது அரற்றுகின்றனர்!

எப்படித் தாங்குவது இத்துன்பத்தை? எவரால்தான் தாங்கிக்கொள்ள முடியும், இத்துயரத்தை?

யாண்டுப் பெறுவது ஆறுதல்? அத்திருப்பணியினை இத்தருணத்தில் இயற்றும் இரும்பு இதயத்தினரை எங்கே தேடுவது?

அவர், கலை உலகத்தை மட்டுமா கண்கலங்கச் செய்துவிட்டார்? இல்லையே! அவர், சீர்திருத்த உலகத்தை மட்டுமா சித்தம் கலங்கச் செய்துவிட்டார்? இல்லையே! அவர், பகுத்தறிவாளர்களை மட்டுமா பதைபதைக்கச் செய்துவிட்டார்? இல்லையே! அவர், அரசியல் துறையினரை மட்டுமா அலறித் துடிக்கச் செய்துவிட்டார்? இல்லையே!

அவர், தம் பிரிவால்—மறைவால்—தமிழ் மக்கள் கூட்டம் அனைத்தையும் அல்லவா துன்பக்கடலில் அமிழ்த்திவிட்டார்!

தமிழ் மக்கள் அவர் கலைத் திறமையை என்றாவது ஏற்க மறுத்ததுண்டா? அவர் உமிழ்ந்த நகைச்சுவையை என்றாவது இரசிக்க மறுத்ததுண்டா? அவர் அத்துறை மூலம் குழைத்துத் தந்த பகுத்தறிவுப் படையலை உண்ணாது இருந்ததுண்டா? எல்லாவற்றுக்கும் மேலாக, அவருக்கு வாழ்வளிக்க தமிழ் மக்கள் மறந்தும் தவறியதுண்டா?

இல்லையே! அவர் காட்டிய நடிப்பு கண்டு கண்டு மகிழ்ந்து, அவர் வழங்கிய நகைச்சுவை கேட்டுக் கேட்டுப் பூரித்து, அவர் அளித்த பகுத்தறிவுத் தெள்ளமுதை உண்டு உண்டு புத்துணர்வு பெற்று இறுமாந்திருந்தத் தமிழ் மக்களுக்கு, அவர் இத்தகு தீராத் துன்பத்தைத் தந்தது நியாயமா?

தனக்குப் பிழை செய்தறியாத் தமிழ் மக்களை, இப்படியா அவர் தாக்க வேண்டும்? தாக்கித் தரைமட்டமாக்க வேண்டும்?

குறள்நெறி கற்றவராயிற்றே! கற்றவர் மட்டுமா? தாம் கற்றதைத் தமிழ் மக்களுக்கு வரையாது வழங்கியவராயிற்றே!

இன்னா செய்தாரை, அவர் நாண நன்னயம் செய்தலே அவரை ஒறுத்தலாகும் என்றல்லவா, தமிழ் மறை ஒலிக்கின்றது? இதனை நன்குணர்ந்த அவர் ஏனோ, நலமே செய்துவந்த நம்மையெல்லாம் இவ்வாறு தண்டித்துவிட்டார்? வெறுந்தண்டனையா இது? விடுபடும் வழி இல்லா வேதனையாகவல்லவோ விளங்குகிறது?

ஆம்! அவர் குறள் தெரிந்தவர்! அவர் நம்மைத் தண்டிக்கவில்லை! திருக்குறளார் உணர்த்தியவழி உலகப் பெருமையை நமக்கெல்லாம் உணர்த்தவே, அவர் நம்மை எல்லாம் விட்டு மறைந்துவிட்டார் போலும்!

இதோ எங்கள் நகைச்சுவை! இதோ எங்கள் கலைவளம்! இதோ எங்கள் தமிழ் வீரம்! இதோ எங்கள் வள்ளற்றன்மை! என்றெல்லாம், இனி எவரைப் பெருமிதத்தோடு காட்டி, தமிழ்ப் பண்பின் தனிச் சிறப்பை நிலைநாட்டவல்லோம்? இத்துறையில் துக்கத்தை ஏக்கமல்லவா விழுங்கி நிற்கின்றது?

அவருடைய வள்ளற்றன்மை, கொடு—கொடு—கொடு—கொடு—என முற்றுப் பெறாத நிலையில் இருந்ததாகும்!

முல்லைக் கொடிக்குத் தம் தேரீந்து பெற்ற வள்ளற்றன்மையும், ஆடும் மயிலுக்கு அழகு பட்டாடை போர்த்திப் பெற்ற வள்ளற்றன்மையும், கலைவாணரின் வரையாது கொடுத்த வள்ளற்றன்மைக்கு உரை போடவும் காணாதே!

ஒன்றா, இரண்டா, பத்து நூறாயிரம், கல்விக்காக, பிணி போக்கும் பணிக்காக, திருமணச் செலவிற்காக, பொது வாழ்வினர் குடும்பக் காப்புக்காகக் கலைவாணர்—அதிலும் வறுமைத் தேள் கொட்டலுக்கு ஆளாகி தமது கல்வியைப் பெருக்கிக் கொள்ள முடியாது, இளமையிலேயே இல்லாமைக்கு ஆளாகிய கலைவாணர்—மனமுவந்து வழங்கி உள்ளார் என்றால் அதனைப் புகழ்ந்துகூறத் தமிழ் மொழியில் சொற்கள்தான் ஏது?

திரை கடல் சென்று, வேற்றுநாடு புகுந்து, அங்குள்ளாரை வாட்டிவதைத்து, ஈட்டிய பொருளில் ஒரு சிறு பகுதியை, 'தர்மதாதா' எனும் பட்டத்தை எதிர்நோக்கி தானம் செய்து பட்டம் பெறும் வள்ளல்கள் வரிசையில் இருப்பவரல்ல நமது கலைவாணர்.

தமது கலைத் திறமையைக் காட்டி, காண்பவரை மகிழ்வித்து, கேட்பவரைக் கருத்துபெறச் செய்து, அவர் மனம் நோகாது தந்த வெண் பொற் காசுகளை, பயனுள்ள நற்பணிகளுக்கு வாரி வாரி வழங்கி புகழ் மணம் பரப்பி நிற்பதாகும் கலைவாணரின் வள்ளற்றன்மை!

கலைவாணரின் உள்ளம் புனிதமானது—தூய்மையானது. அத்தகு புனிதஉள்ளம் கொண்டுலவிய கலைவாணரை நாம் இழந்துவிட்டோம். இல்லை—இல்லை; அவர் நம்முடன் கலந்துவிட்டார். ஆனால், அவர்விட்டுச்சென்ற கலைச்செல்வம், கொடைத் திறம், தமிழ் மக்கள் உள்ளத்தைவிட்டு என்றென்றும் நீங்கப் போவதுகிடையாது.

கலைவாணரின் வாழ்க்கை நமக்கெல்லாம் ஓர் எடுத்துக் காட்டு—எச்சரிக்கை. நகைச்சுவை அரசரின் இழப்பு நமக்கெல்லாம் ஈடுசெய்ய முடியாதது—ஆற்ற இயலாதது.

நமது நிலையே இதுவென்றால், வாழ்விலும் தாழ்விலும் ஒத்தமனத்துடன் வாழ்ந்துவந்த, செந்தமிழ் விறலியார் என்ற சிறப்புடன் விளங்கும் அம்மையாரின் இதயம் எப்படித் துடிக்கும்? அவரை ஆறவும் தேற்றவும் வல்லார் யார்?

அவர்படும் துயரத்தில், நாம் மட்டும் அல்ல, உலகில் உள்ள தமிழ் மக்கள் அனைவரும், கலை அறிவு பெற்றுள்ள நல்லவர் பலரும் பங்கு கொண்டுள்ளோம் என்பதுதான், அவரைத் தேற்றக் கூடும்—அவர் துன்புறு நெஞ்சத்தை மாற்றக்கூடும். காலம் நம் அனைவருக்கும் ஆறுதல் அளிக்குமாக.

கலைவாணர் திருப்பெயர் வாழ்க! நகைச்சுவை அரசர் கண்ட கலைத்துறை வளர்க!

காஞ்சி - கல்யாணசுந்தரன்,
பொறுப்பாசிரியர் 31—8—57

'கெழுதகை நண்பரை இழந்தேன் நான்'

'நாடு ஈடில்லாச் செல்வத்தை இழந்தது'

கலைவாணர் மறைவு: அண்ணா இரங்கலுரை

கலைவாணர் என். எஸ். கே. மறைந்தார் என்ற சோகச் செய்தி கேட்டேன் — திடுக்கிட்டேன்! தாங்கொணாச் சோகம் கப்பிக் கொண்டது!

தமிழகத்தின் இன்றைய எழுச்சிக்குக் கலைத்துறை மூலம் ஒப்பற்ற பணிபுரிந்த கலைவாணரை—தமிழ் மக்களுக்கு, சிரிப்புடன் சிந்தனைச் செல்வத்தையும் வழங்கிய பகுத்தறிவுக் களஞ்சியத்தை—ஏழை எளியோரின் துயர்நீக்க வாழ்வை ஒப்படைத்த உத்தமக் கலைஞரை—தனக்கென வாழாப் பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகையை-எனது கெழுதகை நண்பரை இழந்து விட்டோம்—இழந்துவிட்டேன் என்ற நிலையை எங்ஙனம் தாங்கிக் கொள்வேன்?

ஈடு செய்ய இயலாத இந்த இழப்பால் வாடும் தமிழ் மக்களுக்கு யாரே ஆறுதல் கூறவல்லார்?

அண்ணா அவர்களின் இறுதி மரியாதை

இன்று காலையில் அண்ணா அவர்கள் மாயவரம் சென்று கொண்டிருக்கும் வழியில், கலைவாணரின் மறைவுச் செய்தி கிடைத்தது.

செய்தி கேட்டுத் திடுக்கிட்ட அண்ணா அவர்கள், உடனே காலை மாயவரம் நிகழ்ச்சியையும், மாலை திருமுட்டம் நிகழ்ச்சியையும் ரத்து செய்து விட்டு, உடனே சென்னைக்குப் புறப்பட்டார்கள்.

அண்ணா அவர்களுடன் தில்லை-வில்லாளன் அவர்களும், சென்னை பொன்னுவேலு அவர்களும் சென்னை புறப்பட்டனர்.

இரவு சுமார் 11 மணி அளவில் சென்னை சேர்ந்த அண்ணா அவர்கள் நேராக கலைவாணர் இல்லம் சேர்ந்து கலைவாணருக்குத் தமது இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டார்.

கலைவாணரின் துணைவியார் மதுரம் அம்மையாருக்கும், சூழ நின்ற கலைஞர்களுக்கும் அண்ணா அவர்கள், தமது கண்ணீரால் ஆறுதல் தெரிவித்தார்.

பற்றும்-பாசமும்!

1949-ம் ஆண்டு, திருச்சி மாவட்ட தி. மு. கழக முதல் மாநாடு திருச்சியில் நடைபெற்ற போது, கலைவாணர் அவர்கள் யாரும் எதிர்பாராவண்ணம் திடீரென்று மாநாட்டுக்கு வந்து கழகத்தைப் பற்றித் தாமே தயாரித்த 'வில்லுப் பாட்டு' நிகழ்ச்சியை நடத்தி அனைவரையும் மகிழ்வித்தார்.

அந்த மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் கலைவாணர் கலந்துகொள்ளும் செய்தியே இல்லை; எல்லோருக்கும் அனுப்பப்படும் சாதாரண அழைப்பே கலைவாணருக்கும் அனுப்பியிருந்தனர், மாநாட்டு நிர்வாகிகள். ஆனால், கலைவாணரோ, மாநாடு நடக்கும் தினத்துக்கு முதல் நாள் தந்தி மூலம் மாநாட்டு நிர்வாகிகளுக்குத் தெரிவித்துவிட்டு, தம் குழுவினருடன் வந்து மாநாட்டில் கலை நிகழ்ச்சியில் பங்குகொண்டார்.

கழகத்தின்மீது கலைவாணருக்கிருந்த பற்றினையும், ஆர்வத்தையும் கண்டு, மக்கள் பாராட்டினர்.

கவர்னரின் அனுதாபச் செய்தி

சென்னை கவர்னர் திரு. ஏ. ஜே. ஜான் அவர்கள், கலைவாணர் கிருஷ்ணன் அவர்களின் மறைவு கேட்டு மிக்க வருந்துவதாகவும், அவரது மறைவு தமிழகக் கலை உலகிற்கு ஈடுசெய்ய முடியாதது என்றும், தனது ஆழ்ந்த அனுதாபத்தை கலைவாணரின் துணைவியார் மதுரம் அம்மையாருக்கும், கலைஞர்களுக்கும் தெரிவித்து ஒரு உருக்கமான அனுதாபச் செய்தி அனுப்பியுள்ளார்.

பணக்காரனாக இறக்கமாட்டேன்!

1946-ம் ஆண்டில் சென்னையை அடுத்த ஆலந்தூரில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில், கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"நான் சினிமாவில் நடித்து ஏராளமாகப் பணம் சம்பாதிக்கும் காரணத்தால் என்னை ஒரு பணக்காரன் என்றே எல்லோரும் கருதுகின்றனர். ஆம்; உண்மையில் நான் இப்பொழுது பணக்காரன்தான்; ஆனால், நான் இறக்கும்போது பணக்காரனாகவே இறக்கமாட்டேன்.

"என்னிடம் வந்து சேரும் பணத்துக்கும், மற்ற பணக்காரர்களிடம் சேரும் பணத்துக்கும் வித்தியாசமுண்டு. என் பணம் ஏழைக்கு உதவும்; பணக்காரனிடமுள்ள பணம் ஏழையை உறிஞ்சத்தான் உதவும்."

வரையாது வழங்கிய வள்ளல்!

கலைவாணர், தான் கலை உலகில் ஈட்டிய பொருளத்தனையையும் ஏழை-எளிய மக்களுக்கு உதவுவதற்கென்றே வரையாது வழங்கிய வள்ளலாவார்!

அவரது நிதி உதவியால் வளர்ந்து நிலைபெற்ற பொதுமன்றங்கள், படிப்பகங்கள், பள்ளிக்கூடங்கள், நூல்நிலையங்கள், ஏழை மாணவர் விடுதிகள், சர்க்கார் ஊழியர் சங்கங்கள் ஏராளம்!

அவர், ரூ. 10-இலட்சத்திற்கும் அதிகமாக ஏழை-எளிய மக்களின் முன்னேற்றத்திற்காக வழங்கியிருக்கிறார் என்பது மிகக்குறைந்த மதிப்பீடாகும்.

கலைவாணரின் தேர்தல் பணி

கழகம் வெற்றி பெற அவர் ஆற்றிய தொண்டு

★

கடந்த பொதுத் தேர்தலின் போது, கலைவாணர் அவர்கள், அண்ணா, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, எஸ். எஸ். இராசேந்திரன், கே. கே. நீலமேகம் ஆகியோரது காஞ்சி, சேலம், குளித்தலை, தேனி, குடந்தை ஆகிய ஐந்து தொகுதிகளுக்கும் தாமாகவே சென்று, தமக்கிருந்த பல வேலைத் தொல்லைகளுக்கிடையேயும், பல்லாயிரக்கணக்கான மக்களிடை தேர்தல் பிரச்சாரம் செய்தார்.

ஐந்து தொகுதிகளிலும் வில்லுப்பாட்டுப்பாடி கழக வெற்றிக்காகத் தனது பங்கினைச் செலுத்தினார்.

கழகத்தின் வளர்ச்சியில் தணியாத ஆர்வமும், இலட்சிய ஈடேற்றத்தில் மிகுந்த அக்கறையும் காட்டிவந்த அவர், தேர்தலின் போது உரிமையோடு முன்வந்து பணியாற்றியதில் ஆச்சரியமென்ன இருக்கிறது?

மூன்று கோடி....

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

★

அடுத்து டி. கே. சண்முகம் அவர்கள் பேசியபொழுது குறிப்பிட்டதாவது:—

"கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் பல கலைஞர்களுக்கு வாழ்வளித்தார்; ஆனால், இன்றோ, அவர் வாழ்வு மறைந்துவிட்டது. யார் தேறுதல் கூறுவதென்றே புரியாது நிற்கிறோம். சீரிய சிந்தனையோடு சிரிக்கவைத்தவர்; சார்லி சாப்ளின் அவர்களோடொப்பானவர்.

"கலைவாணருடைய வாழ்க்கை, போராட்டங்கள் நிறைந்ததாகும். பல துயரங்களைத் தாங்கியபடியே படிப்படியாக முன்னுக்குவந்தவர். அப்படிப்பட்ட கலைவாணர் தனது கலையின் மூலம் பிறரின் கவலையை மாற்றினார். அந்த கலைஞர் இன்று மறைந்தார்.

"கலைவாணரை 1955 நவம்பர் பதினைந்தாம் தேதி, தென்னிந்திய நடிகர் சங்கம் பொன்னாடை போர்த்தி கௌரவித்தது."

கடைசியாகப் படமுதலாளி ஏ. வி. மெய்யப்பன் அவர்கள் பேசியதாவது:—

"கடந்த இருபத்தைந்து ஆண்டுக் காலமாக மக்களைச் சிரிப்புக் கடலில் ஆழ்த்தியவர் இன்று துக்கக் கடலில் ஆழ்த்தி மறைந்தார்.

"இந்த மாநிலம் ஒரு சிறந்த நடிகரை இழந்துவிட்டது; அது ஈடுசெய்ய முடியா பெரும் இழப்பாகும். வேடிக்கையும், விநோதமும நிறைந்த வாழ்வோடு, வாக்கு சுத்தமாக, தன்னடக்கத்துடன் வாழ்ந்தார். அவருக்கு என் இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

தமிழகத்தின் கண்ணீர் ஊற்று.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கையே அதிர்ந்துபோய்விட்டது! ஜனங்கள் சிரித்துச் சிரித்து வயிற்றுவலி வந்துவிட்டது; ரொம்பத் தமாஷ் செய்தான்; நாய்போலக் குலைக்கிறான்—அப்படியே அசல் நாய்போலவே இருந்தது.”

இவ்வளவுதான் மக்கள், தாம் கண்ட காமிக்கைப் பற்றிப் பேச முடிந்தது; என். எஸ். கே.-யின் வருகைக்கு முன்பு, அவர் வந்ததும், அந்தத் துறையிலே இருக்கும் அற்புதமான ஆற்றலை மக்கள் உணர முடிந்தது. அவர்கள் சிரித்துவிட்டு மறந்துவிடக்கூடியதாக இல்லை; சிரித்துவிட்டு அத்துடன் சில புதிய கருத்துக்களையும் உடன் அழைத்துக்கொண்டு சென்றார்கள்!

“சின்ன வயதிலே கன்னித்தமிழிலே
சொன்னான் ஒரு பாட்டு
என்று போடுறயே வேட்டு
கல்விகற்றுத் தேரு முன்னம்
கவி எழுதிட வருமா?
கட்டுக் கதைகளை விட்டுத்
குட்டு வெளிப்படுமே! [தள்ளடா

என்று ‘பூம்பாவை’யில் கிருஷ்ணன் பாடினார்; நாம் கேட்டோம், சிரித்தோம்; சிரித்ததோடு நின்றுவிடவில்லை—சிந்தித்தோம்! ‘உண்மைதானே; கல்வி கற்றுத் தேறுமுன்னம் கவி எழுதிட வருமா?’ என்று நம்மை நாமே கேட்டுக்கொண்டோம்; ‘முடியாது’ என்று நமக்கு அறிவு கூறுகிறது. உடனே, மறு நிமிடம் ‘சரியான கேள்வி கேட்டானப்பா!’ என்று வாய்விட்டுக் கூறுகிறோம் நம்மையும் அறியாமல்; மறுபடியும் ஒரு முறை சிரிக்கிறோம்!

உண்ணும்போது சுவை தரும் பண்டம் பல; உண்டான பிறகு நெடுநேரம் வரையிலே, உமிழ்நீர் உள்ளே செல்லும்போதெல்லாம் சுவைதரும் பண்டம் சில! அத்தகைய நகைச்சுவையை நாட்டு மக்களுக்குத் தந்தார் கிருஷ்ணன்!

நாட்டு மக்களின் நிலைமை, உயர் சாதிக்காரரின் உளப்போக்கு, தொழிலாளியின் துயரம், சாதிபேதத்தால் உண்டாகும் மனப்போக்கு, இவைகளை விளக்கினார். புனிதமான கொள்கைகள் என்று மக்கள் கருதும் பல எண்ணங்கள், வெறும் புரட்டு அல்லது பொருளற்றவை என்பன போன்ற பலப்பல புத்துலக அமைப்புக்கான கருத்துக்களை நகைச்சுவையுடன் கலந்தூட்டிய நற்காரியத்தை, வெறும் கோமாளிச் சேட்டைக்கு மட்டுமே பயன்பட்டுவந்த நகைச்சுவை நடிப்புத்துறை மூலம் நாட்டுக்குச் செய்துவந்தார். நகைச்சுவைத் துறையை இத்தகைய சீர்திருத்த மேடையாக்கிய நடிகர்கள் இங்கு இதுவரை தோன்றினதில்லை. மேனாட்டுக் காமிக் நடிகர்களிலேகூட ஹெரால்ட் லாயிட், பஸ்டர் கீடன், லாரல் அண்டு ஹார்டி, ராபர்ட் உல்சி போன்ற புகழ்பெற்ற நகைச்சுவை நடிகர்கள்கூட, வெறும் பொழுதுபோக்குக்கான விளையாட்டுகளைக் காட்டுபவராயினரே தவிர, ‘போதனை’ செய்பவர்களாகவில்லை. ஓரளவுக்கு சார்லி சாப்ளின் சிற்சில படங்களில்—சிறப்பாக ‘சிடி லைட்’ போன்ற படத்திலே கருத்துக்களைத் தருவதற்குக் ‘காமிக்’ துறையைப் பயன்படுத்தினார்; மற்றவர்கள் பெண்ணென்று எண்ணி ஆணை முத்தமிடுவது, வழுக்கி விழுவது, சாமர்த்தியமாக எதிரியை எய்த்துவிடுவது போன்ற ‘காமிக்’குகளைச் செய்தவர்களே தவிர என். எஸ். கே.-வைப்போல, ‘ஆணும் பெண்ணும் ஒன்னு; அதை அறியாதவன் மூளை அது களிமண்ணு’ என்று, காமருந்தை இனிப்புப் பூச்சுடன் கலந்து, நாமாக வாங்கி அதனை ஒன்றுக்குப் பத்தாக உள்ளே போட்டுக்கொள்ளக்கூடிய விதத்திலே நகைச்சுவை நடிப்பைச் செய்ததில்லை. தமிழகத்திலே மட்டுமல்ல—கொஞ்சம் சிந்தனையைச் செலவிட்டால், ‘இந்தியாவிலேயே’ இந்த நகைச்சுவைத் துறையை இதமாகச் சீர்திருத்தம் புகுத்தும் கருவியாக்கிய காமிக் நடிகர் வேறு கிடையாது என்பது விளங்கும். கணக்கெடுத்து அந்த அளவைக் கூறமுடியாதே தவிர, அவருடைய ‘காமிக்’ கண்டதன் மூலம், புதிய சீர்திருத்தக்கருத்துக்களை ஒப்புக்கொண்டவர்களின் தொகை ஒரு மேடைப் பிரசங்கியின் பிரசாரத்தால் திருந்தியவர்களின் தொகையைவிட அதிகம் என்று தைரியமாகக் கூறலாம். சீர்திருத்தக் கருத்துக்களைக் கண்டன உருவிலே காட்டாமல், வேடிக்கைப் பேச்சின்மூலம் புகுத்திய முதல் நடிகர் என்பதால் நாட்டைப் பண்படுத்தப் பாடுபட்ட கவிஞர்கள், பேச்சாளர், எழுத்தாளர் ஆகியோரின் வரிசையிலே, என். எஸ். கே. எனும் நடிகரும் நிச்சயமாக இடம் பெறுகிறார். கவிஞர், எழுத்தாளர் சொற்பொழிவாளர்கள் ஆகியோரின் பணியினால் விளைந்த பலன் போலவே, நகைச்சுவை மன்னனின் பணியினாலும் பெரும் பயன் விளைந்திருக்கிறது என்பதை நாடு இன்று ஏற்றுக்கொள்ள மறுக்கலாம்; ஆனால் உண்மையான எடைபோடும் நாள் வரும்போது, நாடு இந்தத் தொண்டின் மதிப்பைச் சரியாகக் குறித்தே தீரும். இன்றுங்கூட எங்காவது நாம் குளத்தங்கரைப் பக்கம் போனால் அங்கு யாராவது வைதீகப் பிராமணர் ‘சந்தியாவந்தன’த்திலே ஈடுபட்ட வண்ணம் சுற்றுமுற்றும் பார்த்தல் ‘உத்தமபுத்திரன்’ கவனத்திற்கு வாராமற் போகாது!

‘நன்னா இருக்கா! அழகா! இலக்ஷணமா, பிராமணப்பெண் போலவே இருக்கா’ என்று கிருஷ்ணன் கூறுவது நம் செவியிலே விழுவதுகூடக் கேட்கிறதல்லவா! அசல் அய்யங்கார் வீட்டு அம்மாபோல மதாம் நிற்பதும், பேந்தப் பேந்த விழிக்கும் ‘ஆத்துக்காரரை’ப் பார்த்து ‘அரிசன சேவை செய்கிறீரோ, அரிசன சேவை’ என்று இடித்துக் கூறுவதுமான காட்சி தெரிகிறதல்லவா? வெறும் நகைச்சுவையா அது? நாட்டு நிலையின் படப்பிடிப்பு அல்லவா? சிரித்துவிட்டு மறந்துவிட மட்டுமா அவருடைய நடிப்பு பயன்பட்டது? நமது நெஞ்சிலே இடம்பெற்றுவிட்டதே! சாதிச் சிக்கலைப் பற்றிய பேச்சு வரும்போதெல்லாம் எப்படி நாம் ‘சாலிவாகனனை’ மறக்கமுடியும்?

‘உப்பு கரிக்கிறது;
மிளகா உரைக்கிறது;
தண்ணீர் குடிந்தால் நெஞ்சு
அடைக்கவில்லை;
சந்தேகமிருந்தா சாப்பிட்டுப்
பாருங்கோ, சமையல் ரெடியாக
இருக்கு’

என்று அந்தப் படத்திலே, பாடத்தை எவ்வளவு பக்குவமாகப் புகுத்துகிறார்? எப்படி இதனை வெறும் நகைச்சுவை என்று கருத முடியும்? பாட்டாளியின் துயரைப் படம் பிடித்துக் காட்டும் பண்பு, அவர் நடித்த ‘சகுந்தலை’யில் பார்க்கலாம்.

‘ஐயா ஆத்திலே, நாங்க
ஆத்திலே தூண்டிபோட்டு
அதிலே ரெண்டுமீன் கிடைச்சா
அரைவயத்துக்குக் கஞ்சிக்காகும்
கடவுளே
குடும்பம், ஆலாப்பறக்குதடா
கடவுளே!’

என்ற பாடலை என். எஸ். கே. பாடிக் கேட்டிருக்கிறீர்கள். அப்பாடலில், எவ்வளவு உருக்கமாக, பாரதவர்குல மக்களின் பரிதாபகரமான வாழ்க்கையைப் படம் பிடித்துக்காட்டுகிறார்? பரிதாப நிலைமை பாடலுடன் தோய்ந்து வருகிறது; நமது மனதைவிட்டு அதனைப் பெயர்த்தெடுக்க முடியாத நிலைமையில் இடம் பெற்றுவிடுகிறது. எந்தப் படத்திலும், ஏதாவதொரு புதிய முற்போக்கான கருத்தைப் புகுத்தும் பணிபுரிய அவர் தவறியதில்லை. மூலக்கதை புராணமாக இருப்பினும் சரியே; முடிந்த மட்டும் தமது ‘தொண்டு’ அதிலே இடம் பெறச்செய்துவிடுகிறார் திறமையாக—சுவை துளியும் கெடாத விதத்திலே!

நகைச்சுவைத் துறையின்மூலம் நாட்டு மக்களுக்கு நற்கருத்தைப் புகுத்திய வெற்றிகரமான பணி அவருடைய ‘கிந்தனார்’; அதிலே கிண்டல் அல்ல—பாடம் அருமையாக இருக்கக் காணலாம்; கல்வித் துறையிலே பழங்குடி மக்கள் முன்னேறினால் சாதிச் சனியனின் பிடியிலிருந்து விடுபடலாம் என்ற கருத்தை ‘கிருஷ்ண பாகவதராகி’, ‘கிந்தனாரி’ல் கூறினார். கதை மட்டும் அல்ல நாடு கேட்டது — கருத்தையும் உட்கொண்டுவிட்டது. சிறைவாசம் ஏற்பட்டிராவிட்டால், நாடு இன்று அவருடைய ‘நீலகண்டர்’ மூலம் புத்துலக ஆக்கத்துக்கான புரட்சிக் கருத்துக்களைக் கேட்டு இன்புற்றுப் பயனும் பெற்றிருக்கக்கூடும்.

‘பண்டாரப்பரங்கள் வேஷம் பறந்து போச்சுது பார்; தெண்டாயுதபாணி, பரங்கிரிசெந்தூர், பழனி திருப்பதி பண்டாரப்பரங்கள் வேஷம் பறந்து போச்சுது பார்’ என்ற பாடலைக் கேட்டு இரசித்து, அந்த ‘ரசனை’யுடனேயே புரட்சிக் கருத்தையும் உட்கொண்டிருக்க முடியும் நாம் அனைவரும்.

இவ்விதமாக, யாரும் இதற்கு முன் கையாளாத முறையை, நெடுங்காலமாக இருந்துவரும் நகைச்சுவைத் துறையில் புகுத்தி வெற்றி கண்டதுடன், அந்த வெற்றியின் மூலமாகவே, நாட்டுக்கு நற்கருத்துக்களைப் புகுத்தும் நற்தொண்டு புரிந்து, புரட்சி பரப்பிய பெருமக்கள் வரிசையிலே அவர் இடம் பெற்றார் என்பது மட்டுமல்ல—அந்த முறையைப் பின்பற்றித் தீரவேண்டிய நிலைமையை நடிகர் உலகிலே உண்டாக்கிவிட்ட காரணத்தால், அந்த நற்காரியத்துக்கு பலர் முன்வரவும் செய்துவிட்டார். அதாவது, ஓர் நூற்றிலே உண்டாக்கிவிட்டார். நகைச்சுவைத் துறையிலே அவர் ஆற்றிய அரும் பணிக்கு எதையாவது ஈடாகக் கூறவேண்டுமானால், புரட்சிக்கு முன்பு—பிரான்சிலும், ரஷ்யாவிலும்—கவிஞர்கள், எழுத்தாளர், பிரசங்கிகள், நடிகர்கள் ஆகியோர் உண்டாக்கி வைத்த சூழ்நிலையைத்தான் குறிப்பிட முடியும். இந்த அரும் பணியினை அவர் திறம்பட ஆற்ற உறுதுணையாக இருந்து வந்தவர் கொங்குநாட்டுக் கவிஞர் உடுமலைநாராயணகவி. அவரும், இந்த அரும்பணியில் சரிபங்கு கொண்டு பணியாற்றிய மதாம் அம்மையாரும் மட்டுமல்ல—நாமும், நாட்டிலே நற்கருத்து பரவ வேண்டுமென்ற ஆர்வத்தால் தூண்டப்பட்ட இலட்சக்கணக்கான மக்களும், நகைச்சுவை மன்னர், மீண்டும் நாட்டுக்கு நகைச்சுவைத் துறை மூலம் பணிபுரிய வேண்டுமென்பதற்காக, அவரை என்று நம்மிடை பெறுவோம் என்று ஏக்கமுற்று இருக்கிறோம்.

‘மூன்றுகோடி தமிழர்களை அழவைத்து மறைந்து விட்டார்’

‘சிரிப்புணர்ச்சி உள்ளளவும் கலைவாணரும் வாழ்ந்திருப்பார்’

சென்னை வானொலியில் பொதுச்செயலாளர், கலைஞர்கள் இரங்கல் பேச்சு

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் மறைவு குறித்து, அனைத்திந்திய வானொலி—சென்னை நிலையத்தாரால், 30—8—57 மாலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, ‘இரங்கல் சொற்பொழிவில்’ திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மற்றும் கலையுலகத் தோழர்கள் எம். ஜி. இராமச்சந்திரன், கே. சாரங்கபாணி, டி. ஆர். இராமச்சந்திரன், எஸ். டி. சுந்தரம், பி. என். ரெட்டி, டி. கே. சண்முகம், ஏ. வி. மெய்யப்பன் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

நமது பொதுச் செயலாளர் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

“கலைவாணர் திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் நம்மிடமிருந்து பிரிந்துவிட்டார்; வாட்டமும், வருத்தமும் சூழ்ந்த நேரத்தில், நம்மையெல்லாம் சிரிக்கவைத்தவர் இன்று நம்மைவிட்டுச் சென்றுவிட்டார். நாமெல்லாம் செய்வதொன்றும் அறியாது திகைத்துக்கொண்டு இருக்கிறோம். கலைவாணர் அவர்களைக் கண்டவுடனேயே நாமெல்லாம் சிரித்தோம். அவரைக் காண்பது ஒன்றே நம்மை சிரிக்கத் தூண்டும். அப்படிப்பட்ட கலைவாணர் நம்மையெல்லாம் துயரத்தில் ஆழ்த்திவிட்டு, சென்றுவிட்டார். இந்த நேரத்தில் நமக்கு, ஆறுதல் தரவல்லது வள்ளுவரின்,

‘இடுக்கண் வருங்கால் நகுக,
அதனை அடுத்தூர்வது
அஃதொப்பது இல்’

என்ற குறள் ஒன்றே!

“கலைவாணருக்கு ஒப்பாரும், மிக்காரும், யாராவது ஒருவர் உளர் என்றால், அவர் மேலை நாட்டிலே உள்ள சார்லி சாப்ளின் ஒருவரையன்றி வேறொருவர் அல்லர். கலைவாணர் திரைவானிலே மட்டும் ஒளிவீசியவர் அல்லர். அவர், நாடகம், இசை, பேச்சு, திரை ஆகிய துறைகள் அத்தனையிலும் ஒளிவீசி நின்றார். அவருடைய நகைச்சுவையில், சீர்திருத்த ஆர்வம், பகுத்தறிவு உணர்ச்சி ஆகியவை நிறைந்திருந்தன. ஏழைகளுக்கு இரங்கல் திக்கற்றோருக்கு உதவுதல், கொடைத் தன்மை ஆகிய நற்பண்புகள் நிறைந்த ஒரு நல்லவரை மக்கள் இழந்தனர். கலையுலகம் ஒரு காவலரை இழந்தது.”

தென்னிந்திய நடிகர் சங்கச் செயலாளர், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், தாங்கொணா துயரத்தைத் தாங்கியபடி, துக்கம் தொண்டையை அடைக்க தேம்பியபடியே பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“கலையுலகக் காவலன் இறந்தார். இந்த மாபெரும் நஷ்டத்தை நாம் ஈடுசெய்வது என்பது இயலாத ஒன்றாகும். இனி, நமது கலைவாணரைப் போன்ற ஒரு உயர்ந்த நகைச்சுவை நடிகரைக் காண்பது அரிது. போற்றல் மிக்க அந்தக் கலைஞர், உலகக் கலைஞராக விளங்கவேண்டியவர். ஏதோ இந்தத் தமிழ் நாட்டிலே பிறந்த காரணத்தால் இத்துடன் அவர் புகழ் நின்றுவிட்டது. இலட்சக்கணக்கான ரூபாய்களை வள்ளல் தன்மையோடு வாரிவழங்கினார். அந்த வள்ளலின் மறைவால் கலையுலகம் இருண்டு கிடக்கிறது. ஈடுசெய்ய முடியாத ஒரு மாணிக்கத்தை நாம் இழந்துவிட்டோம். மரணத்தின் பிடியிலே சிக்கிவிட்ட அந்தக் கலைஞரின் உடலையும் இன்னும் சில மணி நேரங்களில் இழக்கப்போகிறோம்; இனி எப்போது காணப் போகிறோம்? அவர் காட்டிய வழியில் சென்று, தென்னிந்திய நடிகர் சங்கம் பாடுபடும்.

‘தோன்றிற் புகழோடு
தோன்றுக, அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை
நன்று’

என்ற, குறள்வழியே நின்று, தென்னிந்திய நடிகர் சங்கம் கலைவாணரின் புகழ் வாழ பாடுபடும்.”

அடுத்துப் பேசிய நகைச்சுவை நடிகர் திரு. கே. சாரங்கபாணி அவர்கள் குறிப்பிட்டதாவது:—

“பெருங் கலைஞராக விளங்கிய என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் மூன்று கோடி தமிழர்களைக் கலங்க வைத்துவிட்டுச் சென்று விட்டார். அவர் பிரிவால் கலைவானமே இருண்டு கிடக்கிறது. இந்த சகிக்க முடியாத துயரை எப்படிச் சகிக்கப் போகிறோம் என்பதை நினைக்கும்போதே துன்பம் நம்மை வாட்டுகிறது”

நகைச்சுவை நடிகர் டி. ஆர். இராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“எத்தனையோ நிகழ்ச்சிகளை எடுத்துக் கூற நெஞ்சம் துடித்தாலும், துக்கம் தொண்டையை அடைக்கின்ற காரணத்தால் பேசமுடியவில்லை. நகைச்சுவை நடிகர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கிய அவர், நூறு படங்களுக்குமேல் நடித்திருக்கிறார். அவர் மறைந்தாலும், அவர் நடித்துள்ள படங்களாவது நமக்கு ஆறுதல் தரும். ‘அவர் மறைவு நமக்கெல்லாம் ஒரு பெரிய கஷ்டமாகும்’”

திரைப்படகதை வசனகர்த்தா எஸ். டி. சுந்தரம் அவர்கள் கூறியதாவது:—

“கலைவாணர் காலப் பெருவெள்ளத்தில் கடந்து விட்டார். ஜீவநதி வற்றிவிட்டது. ஏழைகளின் தோழனாக—எளியவர்களின் நண்பனாக விளங்கிய அவர், மூன்று கோடி தமிழர்களை சிரிக்க வைத்துக் கொண்டிருந்த அவர், இன்று மூன்று கோடி தமிழர்களையும் அழவைத்துவிட்டு மறைந்தார்.

‘மனிதனிடத்திலே சிரிப்புணர்ச்சி உள்ளளவும் என். எஸ். கிருஷ்ணனும் வாழ்ந்து கொண்டிருப்பார். பெரும் ஜோதி நட்சத்திரம் மறைந்து விட்டது’”

திரு. பி. என். ரெட்டி அவர்கள் தெலுங்கில் பேசியபொழுது, தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டார்.

(2-ம் பக்கம் பார்க்க)

தமிழ்க் குடும்பத்தின் முக்கிய உறுப்பினரை இழந்துவிட்டோம்'

'கலைச்செல்வருக்கு வீரவணக்கம் செலுத்துவோம்'

துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன் துக்கம்

தென்னகத்தின் இணையற்ற கலைச் செல்வருான நமது ஆருயிர்த் தோழர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்தார் என்ற செய்தி அறிந்து திடுக்கிட்டேன்; நிலைதடுமாறினேன்; மனவேதனையுற்றேன்.

28—8—57 அன்று அவரை மருத்துவ விடுதியில் நான் கண்ட போது அவருக்கிருந்த தெளிவும், இன்று காலை கேட்ட செய்தியும் என்னைக் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டது.

1944-ம் ஆண்டிலிருந்து அவரை அறிவேன். அவரோடு சில முக்கிய நிகழ்ச்சிகளில் நெருங்கித் தொடர்பும் உறவும் கொண்டிருக்கிறேன். அந்த நேரங்களில் அவர் காட்டிய பந்த பாசத்தை தூய்மையான உள்ளத்தை என் வாழ்நாள் முழுதும் மறக்க முடியாததாகும். நமது கழகத்தினிடத்தும், கொள்கையிலும், குறிப்பாக அண்ணா அவர்களிடத்திலும் அவர் வைத்திருந்த பற்றும் பாசமும், மதிப்பும் மரியாதையும் விவரிப்பதெளிதல்ல. தென்னகத்தின் கலைத்துறை மூச்சு நின்று விட்டதென்று கூறின் மிகையாகாது.

அவரது கலைத்தொண்டினை உலகம் பாராட்டியிருக்கிறது. அதன் வாயிலாகத் தமிழகம் உலகப் பாராட்டுதலுக்கு உரிமையாகியிருக்கிறது. தென்னகத்தின் கலைத் துறையில் குறிப்பாக நடிப்புத் துறையில் அவரால் புகுத்தப்பட்டு — வளர்க்கப்பட்டு — போற்றப்பட்டுவரும் ஆற்றலினை நினைக்குந்தோறும் அவரது பிரிவு நம்மை வாட்டி வதைக்கிறது. கலைஞராய் மட்டுமின்றி, பொது வாழ்வில் அவருக்கிருந்த ஆர்வமும், அக்கறையும் நாடு மறக்க முடியாததாகும்.

தமிழ்க் குடும்பத்தின் முக்கிய உறுப்பினரை இழந்ததை என்னுந்தோறும் உள்ளம் குமுறுகிறது. அவரது பிரிவுக்கு மிக மிக வருந்துவதுடன், அவரது குடும்பத்தாருக்கும், குறிப்பாக மதுரம் அம்மையாருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், கலைச் செல்வருக்கு வீர வணக்கத்தையும் பணிவன்புடன் செலுத்துகிறேன்.

நினைவுச் சின்னம்

கலைவாணரின் உடலை அடக்கம் செய்யவிருக்கும் இடத்தில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்புவதற்கும், அதற்கான நிலத்தை விலைக்கு வாங்குவதற்கும் ஏற்பாடு நடைபெறுகிறது.

கலைவாணரின் கழகத் தொடர்புகள்!

★

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தமது வாழ்நாள் நெடுக, பொதுவாக திராவிட இயக்கத்துடனும் — குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத்துடனும் நீங்காத நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் என்பதை நாம் சொல்லத் தேவை இல்லை.

சென்னையிலும், திருச்சியிலுமாக 1951, 1956-ம் ஆண்டுகளில் நடைபெற்ற தி. மு. கழகத்தின் இரு மாநில மாநாடுகளிலும் கலைவாணர் கிருஷ்ணன் அவர்கள் தம் குழுவினருடன்வந்து 'வில்லுப் பாட்டு' நிகழ்ச்சி நடத்தி மாநாட்டிற்கு வந்திருந்த இலட்சோபலட்சம் மக்களுக்கும் கழகக் கொள்கைகளை விளக்கினர்.

காஞ்சியில் :

1954 ஆகஸ்டுத் திங்களில் காஞ்சியில் நடைபெற்ற மாவட்டக் கழகத்தின் இரண்டாவது சமூக சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமை ஏற்றுச் சிறப்புற நடத்தித் தந்தார்.

நாகர்கோவில் :

தாம் பிறந்த நாகர்கோவிலில், கழகத்தின் நாஞ்சில் மாவட்ட முதல் மாநாடு 1950-ல் நடைபெற்றபோது, அங்கு வந்திருந்த கழக முன்னணி வீரர் அனைவரையும், இருநாட்களிலும் தம் இல்லத்தில் விருந்தினராக ஏற்று உபசரித்தார்.

மாவீரர் அழகிரிக்கு நினைவுச் சின்னம்

மறைந்த மாவீரர் அழகிரி அவர்களுக்குத் தஞ்சை நகரில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்ப முன்வந்து பேருதவி புரிந்தவர் கலைவாணர்!

குடும்பத்தார் கடன் நீக்கினர்

மாவீரர் அழகிரியின் மறைவுக்குப் பிறகு, அவரது குடும்பத்தார் பட்டுவந்த கடன் தொல்லைகளிலிருந்து அவர்களை மீட்டுத் தந்தவரும் கலைவாணரேயாவார்.

காஞ்சி கலை விழாவில் :

காஞ்சி பச்சையப்பன் கல்லூரி நிதிக்காக அண்ணா அவர்கள், கடந்த 1952-ம் ஆண்டில் நடத்திய கலை விழாவில் பங்குபற்றி, கல்லூரிக்கு நிதி திரட்டும் அண்ணாவின் முயற்சியை வெற்றி பெறச் செய்யப் பெரிதும் உதவினர்.

கோவை முத்தமிழ் மாநாட்டில் :

1949-ம் ஆண்டில், கோவையில் கழகம் நடத்திய முத்தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துரை ஆற்றினர்.

'இறவாப் புகழை பெற்றுவிட்டார்'

வங்கக் கவிஞரின் வருத்தம்

சென்னை, ஆக. 31—

கவிஞர் ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயா அவர்கள், நேற்று கலைவாணர் அவர்களின் இல்லம் வந்து, தன் இறுதி வணக்கத்தைச் செலுத்திக்கொண்டதுடன், பின்வரும் செய்தியையும் விடுத்தார் :-

"கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் நடிப்புத் துறையில் மட்டுமின்றி, மக்கட் பணியிலும் மேதையாக விளங்கினர்; ரசிகர்களுக்கெல்லாம் தன் அன்புக் கரத்தை நீட்டினர். இவர், மக்கள் உள்ளங்களில் நீங்கா இடத்தையும், இறவா புகழையும் பெற்றுவிட்டார். தென்னகத்தின்-ஏன், இந்தியாவிலேயே மிகப் பெரிய மேதைகளில் ஒருவரை நாம் இன்று இழந்துவிட்டோம்"

'கலைச்செல்வம் பறிபோய்விட்டது'

தென்னிந்திய நடிகர் சங்க அனுதாபம்

தென்னிந்திய நடிகர் சங்கச் செயலாளர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், ஒரு அறிக்கையில் தெரிவிப்பதாவது :—

"தமிழகம் பெற்றெடுத்த அரிய கலைச்செல்வம் பறிபோய்விட்டது; ஈடு இணையற்ற கலைஞர்களின் தலைவனை —இந்த நூற்றாண்டில் காண முடியாத கலையுலகச் செல்வத்தை சாவுக்குப் பறிகொடுத்துவிட்டு கலையுலகம் கண்ணீரைக் கொட்டித் தேம்பி நிற்கிறது.

"கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் இழப்பால் ஏற்பட்டுள்ள ஈடு செய்ய முடியாத நஷ்டத்தை கலையுலகமும், தமிழகமும் எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறது? முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக, நாடக—திரைப் படத் துறையில் கலைவாணர் ஆற்றியுள்ள அரும் பணியை இனிமேல் யார் செய்யப்போகிறார்கள்?

"கலைஞர்க்கட்கும், கலையுலகத்திற்கும் அவருடைய தலைமை இனிமேல் கிடைக்கப்போவதில்லை என்பதை எண்ணும் போது, எதிர்காலமும் இருளடைந்ததுபோல் காண்கிறது. கலைவாணரை இழந்து தவிக்கும் கலைஞர் உலகத்தின் சார்பில் தென்னிந்திய நடிகர் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது."

கலைவாணர் கலந்துகொண்ட கடைசி பொது நிகழ்ச்சி

அண்ணா படத்தைத் திறந்து வைத்தார்

கலைவாணர் அவர்கள் தன் வாழ்நாளில் கடைசி முறையாகக் கலந்துகொண்ட பொது நிகழ்ச்சி, சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி மன்றத்தில் நடைபெற்ற அண்ணா படத் திறப்பு விழாதான்.

இந்த விழா கடந்த 9—8—57-ந் தேதி நடைபெற்றது. இவ்விழாவையொட்டி அண்ணாவும், கலைவாணரும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

தாரமங்கலம் ஊராண்மைக் கழகத்தில் அண்ணா படத்தைத் திறந்துவைத்து கலைவாணர் பேசியபோது குறிப்பிட்டதாவது :—

"அண்ணாவின் படத்தைத் திறந்துவைப்பது என்னுடைய பாக்கியம் என்று சொல்லமாட்டேன்; அது என்னுடைய கடமை.

"என் படுக்கை அறையில் அண்ணா, பெரியார் ஈ. வெ. ரா, காந்தி, புத்தர், ஏசுநாதர் ஆகியவர்களின் உருவப்படங்களை வைத்திருக்கிறேன்; அப்படங்களைப் பார்க்கும் போதெல்லாம் அவர்கள் செய்த சேவை என் நினைவுக்கு வரும். அண்ணா அவர்களின் படத்தைப் பார்க்கும்பொழுது, அவருடைய கல்வியைப் பற்றியும் பேச்சுத் திறமையைப் பற்றியும், அறிவுக் கூர்மையைப் பற்றியும் நினைத்துக் கொள்வேன். அண்ணாவைப்போல் அழகாகப் பேச முடியாமல் இருக்கிறோமே என்றும் கவலைப்படுவதுண்டு.

"பெரியார் படத்தை பார்க்கும்போது அவரது சிக்கனத்தைப் பற்றி எண்ணுவேன். என்னைப் பற்றி நானே எண்ணிக் கொள்வேன் — எவ்வளவு சம்பாதித்தாலும் மிச்சம் வைக்காமல் செலவழித்து விடுகிறோமே என்று எண்ணிக் கொள்வேன். அவ்வாறே, புத்தர், காந்தி, ஏசு இவர்கள் செய்த சேவைகளையும் எண்ணிப்பார்ப்பேன்.

"ஆகவே, இவர்களிடம் உள்ள நல்ல குணங்களை ஒவ்வொருவரும் தெரிந்து அதன்படி நடக்க முற்பட வேண்டும்"

பலதுறை வல்லுநர்!

கலைவாணர் அவர்கள் வெறும் நடிகர் மட்டுமல்ல; சிறந்த டைரக்டருமாவார். அவரது டைரக்ஷனில் உருவானவைதான், 'பணம்' 'மணமகள்' என்னும் படங்கள்.

மற்றும், பல படங்களில் தானும், தன் குழுவினரும் நடிக்கும் கட்டங்களையெல்லாம் கலைவாணரே டைரக்ட் செய்திருப்பதுடன், அவற்றிற்கான வசனங்களையும், சில பாடல்களையும் அவரே எழுதுவதும் உண்டு.

இரவல் குரல் இல்லாமலே தன் சம்பந்தப்பட்ட கட்டங்களுக்கெல்லாம், தானே பாடியிருப்பதும், சில பாடல்களுக்குத் தானே 'மெட்டு' அமைத்துக் கொள்வதும், கலைவாணரின் திறமைக்கு எடுத்துக் காட்டுகளாகும்.

சினிமா துறையில்

சீர்திருத்தப் பணிபுரிந்த 'முதல்வர்'

சமுதாயத்தில் மலிந்துகிடக்கும் மூடப் பழக்க வழக்கங்களையும், ஊழல்களையும் போக்க, சிறந்த கருவி சினிமா என்பதை உணர்ந்து, சீர்திருத்தப் பணியைத் துவக்கிய முதல்வர் நம் கலைவாணரேயாவார்!

கலைவாணர் பரணி;

'சிந்தித்து செயல்படுவதே சீர்திருத்தம்'

'பெயர் மாற்றத்தால் சீர்திருத்தம் ஏற்படாது'

"சமுகச் சீர்திருத்தத்தை சட்டத்தால் செய்துவிடமுடியாது; சமுதாயப் புரட்சி மூலம் மக்களைத் தாங்களாகவே உணரும்படி செய்து, அவர்களாகவே சீர்திருத்தக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டால்தான் செய்யப்படும் சீர்திருத்தம் நிலைக்கமுடியும்.

"சட்டங்களால் ஒருவரை எளிதில் பணியவைக்க முடியாது; அப்படி முடிந்தாலும் அது நீடிக்காது; சட்டங்களால் எதையும் வெகுகாலத்திற்கு நிலைக்கவைக்க முடியாது"

என்று, 21—8—54-ல் காஞ்சீபுரத்தில், தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட சமூகசீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமை வகித்து, கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் சொன்னர் :—

"இன்று நாட்டில் சீர்திருத்தம் என்னும் வார்த்தை பலராலும், பேசப்படுகின்றது. எங்கே திரும்பினாலும் சீர்திருத்தம் பேசப்படுகின்றது.

"சீர்திருத்தம் என்பது வெறும் பெயர் மாற்றத்தால் ஏற்படுவதல்ல; மக்களுடைய அன்றாட வாழ்க்கையில்—நடத்தையில், அவர்களிடம் நிலவுகிற மூடப் பழக்கங்களும், மடமை எண்ணத்தை அடிப்படையாகக் கொண்ட செய்கைகளும் அறவே நீக்கப்பட்டு, புதிய அறிவுக்குப் பொருத்தமான செய்கைகளும் இடம் பெறுவதுதான் சீர்திருத்தமாகும்.

"மக்கள், பிறர் சொல்வதையும் கேட்கவேண்டும்; தாங்களாகவும் சிந்திக்கவேண்டும். கேட்டுச் சிந்தித்து, சீர் தூக்கிப் பார்த்து வருகிற முடிவை செயலில்—நடைமுறையில் வைத்துக் கொள்ளவேண்டும்; இதுதான் சீர்திருத்தமாகும்.

"யார் எதைச் சொன்னாலும் அதை அப்படியே நம்பி, தன்னிஷ்டப்படி காரியமாற்றுகிற மனப்போக்கு மாற்றப்பட்டு, யார் சொல்வதையும் கேட்டு சிந்தித்துச் சீர்தூக்கி பின், செயல்புரிகிற நிலைக்கு மக்களைக் கொண்டுவருவதே—இந்த மகத்தான மாற்றத்தை உண்டுபண்ணுவதே, சீர்திருத்தமாகும்.

"இதில் இன்னும் ஒன்று உண்டு. சிலருக்கு சீர்திருத்த எண்ணமும் இருக்கும்—பழைமைப் பிடியிலும் இருப்பார்கள்; இது கூடாது. இந்த 'இரண்டும் கெட்டான்' நிலை மிக மிக மோசமானது. ஒன்று, பழைமைக் கருத்துக்களை—சடங்குகளை—சம்பிரதாயங்களை அறவே விட்டுவிட்டு, பகுத்தறிவுக் கருத்துக்களை—சீர்திருத்தச் செயல்களை மேற்கொள்ளுங்கள்; அல்லது பழைமையிலேயே உழலுங்கள். இதை விடுத்து, 'இரண்டிலும் கொஞ்சம் வைத்துக் கொள்கிறேன்' என்று நினைப்பது நல்லதல்ல; ஆபத்தானதுங்கூட"

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.